# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு. எஸ்.தனராசு, பி. இ.,
திட்ட அனுமதி
நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். 2658/2018/ உ.நத - 1 நாள்: **20.8.2018**
தி.அ.எண். 214/2018
உள்ளாட்சியின் பெயர்: எட்டிமடை பேரூராட்சி

பொருள் : மனைப்பிரிவு - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - **கோயம்புத்தூர்** மாவட்டம் - மதுக்கரை வட்டம் - எட்டிமடை பேரூராட்சி (ம) கிராமம் – நிலஅளவுஎண்கள்.242/2B2- மற்றும் 243/3A2- 2.21 ½ ஏக்கர் (அ) 96485.0 ச.அடி அல்லது 8963.67 ச.மீ - **உத்தேச குடியிருப்பு** மனைப்பிரிவிற்கு - திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை : 1. மனுதாரர் திரு.உத்தம்சந்த் தல்ரேஜா. த/பெ.சேவாராம் **தல்ரேஜா,** கோயம்புத்தூர் அவர்கள் விண்ணப்பம் நாள்.**22.5.2017.**
2. செயல் அலுவலர், எட்டிமடை பேரூராட்சி, **அவர்கள்** கடிதம் ந.க.எண்.2975/2015 நாள்.**19.11.2016** (ம)**13.7.2018.**
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும கூட்ட தீர்மானம் **எண்.49,** நாள்.27.6.2018.
4. மனுதாரர் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய நாள் . **17.8.2018.**

உத்திரவு:

**கோயம்பு**த்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் **மாவட்டம் - மதுக்கரை** வட்டம் - எட்டிமடை பேரூராட்சி (ம) கிராமம் – நிலஅளவுஎண்கள்.**242/2B2- மற்றும் 243/3A2- 2.21** ½ ஏக்கர் (அ) 96485.0 ச.அடி அல்லது **8963.67** ச.மீ **மனைப்பரப்பளவில்** அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/கோ.உ.திகு. **எண்165/2018 எண்**ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.**214/2018** **என எண்ணிட்டு** கீழ்கண்ட நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி **திட்ட அனுமதியும் அளிக்க**ப்படுகிறது.

**மனு**தாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் **கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம்** பெறுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை -1

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

### நிபந்தனைகள்

(அ) இந்த திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

(ஆ) பிரிவு 80 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 54(1)ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

(இ) கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு

1. திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,

2. சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,

உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு

(ஈ) திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எல்லோரும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

(உ) தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனை பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றபட வேண்டும்.

(ஊ) வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின். அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (செயல் அலுவலர், எட்டிமடை பேரூராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(எ) செயல் அலுவலர், எட்டிமடை பேரூராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர்(பொறுப்பு),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்.
கோயம்புத்தூர்-12

இணைப்பு
முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனைப்படிவம் - 2

பெறுநர்
செயல் அலுவலர்,
எட்டிமடை பேரூராட்சி,
மதுக்கரை வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்: (உள்ளாட்சி வழியாக)
திரு.உத்தம்சந்த் தல்ரேஜா,
த/பெ.சேவாராம் தல்ரேஜா,
எண்.12, தந்தை ரோடி தெரு
R.S.புரம்,
கோயம்புத்தூர் - 641 012.

# 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201வது பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம்

## எட்டிமடை பேரூராட்சி அலுவலகம்
## முன்னிலை திரு.ப.கந்தசாமி செயல் அலுவலர்

ந.க.எண்.297/2015, நாள்– 31.08.2018

பொருள்: மனைபிரிவு – எட்டிமடை பேரூராட்சி – க.ச.எண். க.ச.எண்.242/2B2, 243/3A2-ல் மனைப்பிரிவு கோவை உள்ளூர் திட்ட குழும அங்கீகாரம் பெற்றது உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை 1) உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கோவை உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் திட்ட அனுமதி ந.க.எண்.2658/2018/உதிகு1, நாள்-20.08.2018.

2) உறுப்பினர் செயலர் (பொ) உள்ளூர் திட்டக் குழுமம் கோவை அவர்களின் ம.வ/கோ.உ.தி.கு.எண்.165/2018 மற்றும் திட்ட அனுமதி எண்.214/2018 நாள்-20.08.2018அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

3) திரு.உத்தம் சந்த் தல்ரேஜா கோவை என்பவரின் விண்ணப்பம் நாள்--24.08.2018.

----

உத்திரவு

கோயமுத்தூர் மாவட்டம், எட்டிமடை பேரூராட்சி மற்றும் கிராமம் க.ச.எண். க.ச.எண்.242/2B2, 243/3A2–ல் 2.21 1/2 ஏக்கர் (96485.00) சதுரஅடி பரப்பு கொண்ட மனைப்பிரிவுக்கு பார்வை 1-ல் காணும் கோவை உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் தொழில்நுட்பம் மற்றும் திட்ட அனுமதியின்படி கீழ்காணும் ம.வ./கோ.உ.தி.கு எண்.165/2018 என எண்ணிட்டும் மற்றும் திட்ட அனுமதி எண்.214/2018 என எண்ணிட்ட உத்திரவுப்படியும் மேற்கண்ட உத்திரவில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படியும், வரைபட அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

மேலும் பார்வை 2-ல் காணும் கோவை உள்ளூர் திட்டக்குழுமம் ந.க.எண்.2658/2018/உதிகு–1 மற்றும் தி.அ.எண்.214/2018, நாள்-20.08.2018–ன்படி மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட உத்திரவில் கண்டுள்ளவாறு க.ச.எண்.242/2B2, 243/3A2–ல் உள்ள மனைப்பிரிவுகளுக்கு லட்சுமி நகர் (**Lakshmi nagar**) எனப் பெயரிட்டு பிரிக்கப்பட்டுள்ளதன்படியும், மேற்கண்ட கோப்பில் தெரிவித்துள்ளதற்கிணங்க மனைப்பிரிவு நிபந்தனைகள் வரிசை எண்.1 முதல் 27 முடிய உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனைகளைப் பிரித்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காதவாறு செயல்படுத்திடவும், கீழ்க்கண்ட மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்முறைப்படுத்திடவும் வரைபடம் அங்கீகாரம் செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

செயல் அலுவலர்
எட்டிமடை பேரூராட்சி
கோவை – 641 105.

**இணைப்பு**
மனைப்பிரிவு நிபந்தனைகள்

**பெறுநர்**
திரு.உத்தம் சந்த் தல்ரேஜா
த/பெ.சேவாராம் தல் ரேஜா (லேட்)
1–2 தந்தை ரேண்டி தெரு,
ஆர்.எஸ்.புரம்,
கோவை – 02.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate